# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
(பதிவு எண் 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு.பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

மாநிலப் பொருளாளர்
**எம்.தங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா.பன்னீர்செல்வம்**
**சி.ஆர்.இராஜகுமார்**
**என்.ஜனார்த்தனன்**
**தி.கலைசெல்வி**
**எம்.செளந்தரராஜன்**
**ஏ.பெரியசாமி**


ஊடகச் செய்தி.எண்.19/2017 நாள்.-06-06-2017

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் அதன் தலைவர் திரு. **மு. சுப்பிரமணியன்** மற்றும் பொதுச் செயலாளர் திரு.**மு. அன்பரசு** ஆகியோர் கூட்டாக விடுக்கும்

**ஊடகச் செய்தி**

## உறுதியளித்த காலவரைக்குள் ஊதிய மாற்றத்தை ஏற்படுத்திடவும், நிலுவை கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றிடவும் தமிழ்நாடுஅரசு ஊழியர் சங்கம் தமிழக அரசுக்கு வேண்டுகோள்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கான 8வது ஊதிய மாற்றத்தை அமுல்படுத்துதல், புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய பென்சன் திட்டத்தை தொடருதல், 8வது ஊதிய மாற்ற அலுவலர் குழுவின் பரிந்துரைகள் அமலாகும் வரை 1.1.2016 முதல் 20 சதவீதம் இடைக்கால நிவாரணம் வழங்குதல், சிறப்பு காலமுறை ஊதியத்தை ஒழித்து வரையறுக்கப்பட்ட ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்குதல். தொகுப்பூதியம், மதிப்பூதியம், தினக்கூலி, அவுட்சோர்சிங் முறையிலான பணி நியமனங்களை ரத்து செய்து, காலியாகவுள்ள பணியிடங்களை காலமுறை ஊதியத்தில் நிரப்பிடுதல், சாலைப் பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தை பணிக் காலமாக அறிவிக்க கோருதல் உள்ளிட்ட கோரிக்கைகளுக்காக பலகட்ட போராட்டங்கள் நடத்தியும், அரசு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாத நிலையில், காலவரையற்ற வேலை நிறுத்தம் தவிர்க்க இயலாததாகி 25.04.2017 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழக முதலமைச்சர் அவர்களின் தலையீட்டின் பேரில் 26.04.2017 அன்று அமைச்சர்கள் திரு.**டி.ஜெயக்குமார்**, திரு.**கே.எஸ்.செங்கோட்டையன்**, திரு.**ஆர்.பி.உதயகுமார்** மற்றும் நிதிச் செயலாளர் திரு.**கே.சண்முகம்** ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற பேச்சு வார்த்தையில், மேற்கண்ட கோரிக்கைளின் பேரில் ஜூலை 2017க்குள் உரிய முடிவுகள் மேற்கொள்ளப்படும் என உறுதியளித்ததன் அடிப்படையில் வேலை நிறுத்தப் போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

அமைச்சர்கள் உடனான பேச்சுவார்த்தையின்போது 8வது ஊதிய மாற்ற அரசாணைகள் வெளியிடுவதற்கு முன்பு, அரசுத் துறைகளில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அங்கீகாரம் பெறாத அனைத்துச் சங்கங்களையும் அலுவலர் குழு நேரடியாக அழைத்து கருத்துக்களைக் கேட்டு, கருத்தொற்றுமையின் அடிப்படையில், முரண்பாடுகளற்ற, சமச்சீரான ஊதிய மாற்றத்தை ஏற்படுத்த வழிவகை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொண்டபோது, அதற்கு அமைச்சர்கள் மற்றும் நிதித்துறைச் செயலாளரும், ஊதிய மாற்ற அலுவலர் குழுவின் தலைவருமான திரு. **கே. சண்முகம்**, இ.ஆ.ப. ஆகியோர் ஒப்புக்கொண்டனர். அமைச்சர் பெருமக்கள் ஒப்புக்கொண்டபடி

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
# Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


2017 மே 26, 27 தேதிகளிலும் மற்றும் 2017 ஜூன் 2,3 தேதிகளிலும் அலுவலர் குழு, அனைத்து அரசுத் துறை சங்கங்களையும் அழைத்துப் பேசி அவர்களின் கருத்துக்களைக் கவனமாகக் கேட்டறிந்ததோடு, துறைவாரிச் சங்கங்கள் முன் வைத்த சென்ற ஊதிய மாற்றத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளையும் பொறுமையுடன் கேட்டு அவற்றை பதிவு செய்து கொண்டது.

அலுவலர் குழுவுடனான நேரடிப் பேச்சுவார்த்தையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில நிர்வாகிகள் கலந்துகொண்டு பேசியபோது, அலுவலர் குழு, முரண்பாடுகளற்ற ஊதிய மாற்றம் ஏற்படும் வகையில் பரிந்துரைகள் அளிக்கப்படும் எனவும், இந்தப் பரிந்துரைகள் ஜூன் மாத இறுதிக்குள் அரசுக்கு சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவித்தனர்.

ஊதிய மாற்றம் தவிர்த்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் முன் வைத்த, அரசு ஊழியர்களின் நீண்ட நாள் நிலுவை கோரிக்கைகளையும் அவற்றில் பலவற்றை அலுவலர் குழு ஆராய்ந்து முடிவு செய்யும் என மறைந்த முன்னாள் முதலமைச்சர் **ஜெ.ஜெயலலிதா** அவர்கள் சட்டப் பேரவையில் விதி எண்.110ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்ததையும் சுட்டிக்காட்டி அவற்றின் பேரிலும் பரிந்துரைகள் அளிக்க ஏற்கெனவே முதலமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்திருந்ததோடு, அதை இப்பேச்சுவார்த்தையின் போது அலுவலர் குழுவிடம் நேரிலும் தெரிவித்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தியது. ஊதிய மாற்ற அலுவலர் குழு, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத் தலைவர்களுடன் நடத்திய 45 நிமிடப் பேச்சுவார்த்தையில் மேற்கண்டவைகள் குறித்தும் பரிசீலித்து அரசுக்கு பரிந்துரை அறிக்கை அளிப்பதாக உறுதி அளித்தனர்.

எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்,

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், அலுவலர் குழுவுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் போது உறுதி அளித்திருந்தபடி ஜூன் 2017க்குள் ஊதிய மாற்றம் குறித்த பரிந்துரைகளையும், இதர நிலுவை கோரிக்கைகள் குறித்த அறிக்கைகளையும் பெற்று,**

**26.04.2017ம் தேதி அமைச்சர்கள் மற்றும் நிதிச் செயலாளர் முன்னிலையில் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் அமைச்சர்கள் கொடுத்த உறுதிமொழிகளின்படி, ஜூலை 2017க்குள் ஊதிய மாற்றம் குறித்த அரசாணைகளும்,**

**புதிய ஓய்வூதிய திட்டம் ரத்து, சிறப்பு காலமுறை ஊதியத்தை வரையறுக்கப்பட்ட ஊதியமாக மாற்றுதல் மற்றும் ஓய்வூதியம் வழங்குதல், தொகுப்பூதியம். மதிப்பூதியம், தினக்கூலி, அவுட்சோர்சிங் முறையிலான பணி நியமனங்களை ரத்து செய்து காலியாகவுள்ள பணியிடங்களை காலமுறை ஊதியத்தில் நிரப்பிடுதல்,**

**சாலைப் பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தை பணிக் காலமாக அறிவித்தல் போன்றவை குறித்த அறிவிப்புகளும் வெளியிடுவதோடு,**

**ஊதிய மாற்றம் மூலம் அரசு ஊழியர்கள் 1.1.2016ஆம் தேதி முதல் பெற வேண்டிய நிலுவைத் தொகைகளை ரொக்கமாக உடனடியாக வழங்கிடவும்,**

உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு, உறுதியளித்த காலவரைக்குள் நிலுவை கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றிட தமிழ்நாடுஅரசு ஊழியர் சங்கம் தமிழக அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

**(மு.அன்பரசு)**
பொதுச் செயலாளர்